# <u>தமிழ்நாடு அரசு</u>

சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை – சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதிகள் – 2003 – 2004 ஆம் ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் 28 பணிகளை மேற்கொள்ளுதல் – நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைத் (எச்.டபிள்யூ.1) துறை

அரசாணை (நிலை) எண்.200 நாள்: 25/09/2003

படிக்கவும்:

தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, கடிதம் எண். 7918/சாலை 1/2003, நாள் 20/06/2003.

** * **

<u>ஆணை:–</u>

சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் 2003–2004ஆம் ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது.

2) 23/05/2003 அன்று நடைபெற்ற சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதியில் 2003 – 2004 ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டம் (Infrastructure Investment Plan) குறித்த ஆய்வுக் கூட்டத்தில், 2003 – 2004ஆம் ஆண்டிற்கான ஓராண்டு திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கான செயற்குறிப்பை தலைமைப் பொறியாளர் (பொது) அரசிற்கு அனுப்பியுள்ளார்.

| | | | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| I | <u>சாலை / ஆற்றுப் பாலம்</u> | | |
| | 1. | ஜி.டபிள்யு.டி. சாலை கிமீ. 6/6ல் உள்ள பாலத்தினை இரண்டுபுறமும் அகலப்படுத்துதல். | 300.00 |
| II | <u>போக்குவரத்து மேலாண்மை திட்டம்</u> | | |
| | 2. | அண்ணாசாலையில் போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் மற்றும் போக்குவரத்து சமிஞ்சைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் | 150.00 |

| | | | |
|---|---|---|---|
| | 3. | ஈ.வெ.ரா. பெரியார் சாலையில் போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் மற்றும் போக்குவரத்து சமிஞ்சைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் (Synchronizing) (GWT Road) | 100.00 |
| | 4. | உள்வட்டச் சாலையில் போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் மற்றும் போக்குவரத்து சமிஞ்சைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் | 150.00 |
| | 5. | அரசினர் தோட்டத்திற்கு அருகில் அண்ணா சாலையை அகலப்படுத்துதல் | 9.70 |
| | 6. | ஜி.எஸ்.டி. சாலையில் மருத்துவ இயக்குனரகம் அருகில் பேருந்து நிறுத்தம் (Bus Bay) அமைத்தல் | 11.90 |
| | 7. | ஜி.எஸ்.டி. சாலையில் பாரதிதாசன் சாலை சந்திப்பை அகலப்படுத்துதல் (எஸ்.ஐ.இ.டி. அருகில்) | 5.25 |
| | 8. | அண்ணாசாலை கிமீ. 8/6ல் உள்ள பாலத்தை அகலப்படுத்துதல் (ஜேரன்ஸ் சாலை சந்திப்பு அருகில்) | 50.00 |
| | 9. | சைதாப்பேட்டையில் ஜி.எஸ்.டி சாலையிலுள்ள மின்மாற்றியை இடம்பெயர்த்து சாலையை அகலப்படுத்துதல் | 7.70 |
| | 10. | தே.நெ.45 கிமீ. 12/0 மற்றும் 12/4ல் (வலது பக்கம்) கத்திப்பாரா சந்திப்பை மேம்படுத்துதல். | 15.50 |
| | 11. | ஈ.வெ.ரா. சாலையில் கிமீ. 1/1 – 1/2ல் (வலது பக்கம்) (விக்டோரியா பொதுக் கூடம் அருகில்) பேருந்து நிறுத்தத் தடம் (Bus Bay) அமைத்தல். | 7.50 |
| | 12. | ஜி.டபிள்யூ.டி. சாலையில் கிமீ. 10/0 – 10/1ல் (இடது பக்கம்) (கோயம்பேடு பேருந்து நிறுத்தத் தடம் (Bus Bay) அமைத்தல். | 6.00 |
| | 13. | உள்வட்ட சாலை கிமீ. 3/4 – 3/5 வரை (இடது பக்கம்) சாலையை அகலப்படுத்துதல். | 7.00 |
| | 14. | உள்வட்டச் சாலையில் கிமீ. 7/4 – 7/6ல் (வலது பக்கம்) பேருந்து நிறுத்தத் தடம் (Bus Bay) அமைத்தல். | 34.00 |
| | 15. | சர்தார்பட்டேல் சாலையில் காந்திநகர் பூங்கா அருகில் பேருந்து நிறுத்தத் தடம் (Bus Bay) அமைத்தல் | 34.00 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 16. | சர்தார்பேட்டேல் சாலையில் தொழிலாளர் பயிற்சி நிலையம் மற்றும் சி.எல்.ஆர்.ஐ. அருகில் பேருந்து நிறுத்தத் தடம் (Bus Bay) அமைத்தல். | 47.00 |
| | 17. | நடைபாதையில் அகலத்தை குறைத்து மெக்நிக்கல்ஸ் சாலையை அகலப்படுத்தும் பணி. | 8.70 |
| | 18. | தெற்கு கடற்கரை சாலையிலிருந்து மூலக்கடை சந்திப்பு வரை செல்லும் சாலை கிமீ. 9/4 – 9/950ல் உள்ள மனநல மையம், தொழிலாளர் நல மருத்துவமனை மற்றும் தொழிலாளர் மருத்துவமனை அலுவலர் குடியிருப்பு ஆகியவற்றின் நிலங்களை பயன்படுத்தி மேடவாக்கம் ஏரிச்சாலையை அகலப்படுத்துதல். | 141.00 |
| | 19. | சர்தார் பட்டேல் சாலையில் அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் காமராஜர் மண்டபம் அருகில் பேருந்து நிறுத்தத்தடம் அமைத்தல். | 46.50 |
| | 20. | ஜி.டபிள்யூ.டி. சாலையில் கிமீ. 0/5 – 0/8 (வலது பக்கம்); 0/1 – 5 (வலது பக்கம்) மற்றும் 0/3 – 5 (இடது பக்கம்) வரை அகலப்படுத்துதல். | 16.00 |
| | 21. | என்.எஸ்.கே. சாலை (ஆற்காடு சாலை) கிமீ. 10/750ல் காளி அம்மன்கோயில் சாலை சந்திப்பினை மேம்படுத்துதல். | 33.00 |
| | 22. | தெற்கு கடற்கரை சாலை முதல் வளசரவாக்கம் வரையிலான சாலையில் கிமீ. 10/460 – 700 வரை ஆற்காடு சாலையை அகலப்படுத்துதல். | 31.20 |
| | 23. | ஆற்காடு சாலை கிமீ. 7/7ல் மண்டலம் VIII அலுவலகத்திலிருந்து நிலத்தை பயன்படுத்தி பேருந்து நிறுத்தத்தடம் அமைத்தல் (தெற்கு கடற்கரை சாலை முதல் வளசரவாக்கம் வரை) | 14.80 |
| | 24. | கிமீ. 6/430 – 6/700ல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலான சாலையில் நடைபாதையின் அகலத்தைக் குறைத்து அண்ணா நகர் முதல் நிழல் மரச் சாலையை அகலப்படுத்துதல். | 28.00 |
| III | நகரப் பெரிய சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் | | |
| | 25. | வேளச்சேரி புறவழிச் சாலை கிமீ. 0/0 – 1/9 வரை ஆறு வழித் தடங்களாக (முக்கிய மாவட்ட சாலை) அகலப்படுத்துதல் | 500.00 |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் உறுதிப்படுத்துதல் | |
| | 26. | காமராஜ் சாலையை (தெற்கு கடற்கரை சாலை கிமீ. 2/9 – 5/7) அகலப்படுத்தி மேம்படுத்துதல். | 500.00 |
| | 27. | கோடம்பாக்கம் – ஸ்ரீபெரும்புதூர் சாலை (முக்கிய மாவட்ட சாலை) கிமீ. 7/0 – 12/0–ஐ நான்கு வழித் தடங்களாக அகலப்படுத்துதல். | 400.00 |
| | 28. | மேடவாக்கம் – மாம்பாக்கம் சாலை கிமீ. 0/0 – 8/0 அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் | 380.00 |
| | | மொத்தம் | ரூ.3034.75 இலட்சம் |

3) தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் செயற்குறிப்பை ஏற்று, சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் 2003 – 2004ஆம் ஆண்டிற்கான அடிப்படை வசதி முதலீட்டுத் திட்டத்தின் கீழ் (Infrastructure Investment Plan) 28 பணிகளை ரூ.3034.75 இலட்சம் (ரூபாய் முப்பது கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) செலவினத்தில் மேலே பத்தி – 2ல் குறிப்பிடப்பட்ட 28 பணிகளை அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"5054 – சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 80 – பொது – 800 ஏனைய செலவுகள் – பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JW – சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் – சென்னை மாநகரில் பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்துதல் – 16 – பெரும்பணிகள் (D.P.C.5054 - 80 - 800 - JW - 1608)".

5. இவ்வரசாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு. எண்.570/து.செ.(வி.என்.ப்பி)/2003, நாள் 23/09/2003ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.எஸ். ஸ்ரீபதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 5.

உறுப்பினர் செயலர், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம், எழும்பூர், சென்னை – 8.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாநில கணக்காயர், சென்னை – 35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.

நகல்:
நிதி (பொதுப்பணி – 1), சென்னை – 9.
வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை – 9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை மற்றும் வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.